# யாப்பருங்கலக்காரிகை

உறுப்பியல்
↓
எழுத்து (13)
↓
உயிர் எழுத்துக்கள்

குறில் (5) | நெடில் (7) | ஆவி (12)

## 1) குறில் :-

1. குறில் என்பது குற்றெழுத்து.
2. குறுகிய ஓசையை உடையது.
3. இதின் மாத்திரை அளவு ஒன்று ஆகும்.

(எ.டு) 4. அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குறில்.

## 2) நெடில் :-

1. நெடில் என்பது நெட்டெழுத்து.
2. நீண்ட ஓசையை உடையது.
3. நெடிலின் மாத்திரை அளவு இரண்டு ஆகும்.

(எ.டு) 4. ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஔ ஆகிய ஏழும் நெடில்

## 3) ஆவி :-

1. ஆவி என்பது உயிரெழுத்து
2. அகரம் முதல் ஔகாரம் ஈறாக

"உள்ள பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள்."

CPA College BAK

## குற்றியலிகரமும் குற்றியலுகரமும்:-

உறுப்பியல் குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகியவை அரை மாத்திரை பெறும் எனக் கூறப்பட்டது. இரு எழுத்துகளும் அரை மாத்திரை பெறுவன. எனினும் எழுத்துகளைக் கூட்டி அலகிடும் போது குற்றியலிகரத்தையும் குற்றியலுகரத்தையும் இரு குற்றெழுத்துக்களைப் போலக் கொண்டு அலகிடுவதே வழக்கமானது.

### குற்றியலிகரம்:-

"சிறுநன்றி இன்றிவர்க்கியாம் செய்தக்கால் நாளைப்
பெருநன்றி மன்னும் பெரிதென் - றுறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉம் தானமன் றென்பது
வானவரும் உள்ளத் தவர்"

(எ.டு)

அருளல்ல தியாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்"
(திருக்குறள்: 254)

(அருளல்லதியாதெனில் = 'தி' குற்றியலிகரம்
அருள் இல்லது = அருளும் இல்லாததும்
கோறல் = கொல்லுதல்

### உயிரளபெடை:-

உயிரளபெடை மூன்று மாத்திரை பெறும் என உறுப்பியலில் கூறப்பட்டது. ஆனால் சீரும் தளையும் இதையும் நிலை வருமானால் அளபெடை

CPA College BAK

நெட்டெழுத்துப் போலவே கொண்டு அலகிட வேண்டும்.

(எ.டு) "பல்லார்க்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்றும் தோற்றிலவால் —
நெல்லுக்கு
நூறோஒகை யென்பான் நுடங்கிடைக்கும் மென்முலைக்கும்
மாறோமாய் அன்றளந்த மண்

தோற்றில = தோன்றவில்லை; நூறோஒகை = விலை கூறி விற்றல்

மாறு = ஒப்பு

ஐகாரக் குறுக்கம்:-

ஐகாரக் குறுக்கம் ஒன்றரை மாத்திரை
பெறும் என உருபியலில் கூறப்பட்டது. ஆயினும்
அலகிடும்போது ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்தைப் போலக்
கொள்ளப்பட்டு அதன் பின் வரும் ஒற்று அல்லது
நெடியுடன் சேர்த்து நிரையசையாக அலகிடப்படும்.

(எ.டு) அன்னையையான் நோவ தவமால் அணியிழாய்
புன்னையையான் நோவன் புலந்து

அவம் = வீண்; நோவன் = வருந்தவேன்; புலந்து = சினந்து